TC-35

109/DM/19

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

# DEPARTMENTAL TEST FOR AUDIT SUPERINTENDENTS OF HIGHWAYS DEPARTMENT – SECOND PAPER (ELEMENTARY BOOK-KEEPING)

(Without Books)

Maximum Time : 2.30 hours Maximum Marks : 100

## *IMPORTANT INSTRUCTIONS*

## DESCRIPTIVE TYPE

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

I. **Answer any SIX of the following.**
**கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் ஆறினுக்கு விடையெழுதுக.**

**(6 × 4 = 24)**

1. Write notes on real accounts.

   சொத்துக் கணக்குகளைப் பற்றி குறிப்பு வரைக.

2. What is compound journal entry?

   கூட்டுக் குறிப்பேட்டு பதிவு என்றால் என்ன?

3. What is Credit balance?

   வரவு இருப்பு என்றால் என்ன?

4. What is bad debts?

   வாராக் கடன் என்றால் என்ன?

[Turn over

5. What is cash discount?

ரொக்கத் தள்ளுபடி என்றால் என்ன?

6. What is capital expenditure?

முதலின செலவு என்றால் என்ன?

7. Write notes on deferred revenue expenditure.

நீள்பயன் வருவாயின செலவு சிறு குறிப்பு வரைக.

8. What is Profit and loss account?

இலாப நட்டக் கணக்கு என்றால் என்ன?

II. **Answer any SIX of the following.**
**கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் ஆறினுக்கு விடையெழுதுக.**

**(6 × 6 = 36)**

1. What are the objectives of Books keeping?

கணக்கு ஏடுகள் பராமரிப்பின் நோக்கங்கள் யாவை?

2. Journalise the following in the journal of Thiru. Gowri Sankar.

| 2003 | | Rs. |
|---|---|---|
| Oct. 1 | Received cash from Siva | 75,000 |
| 7 | Paid cash to Sayeed | 45,000 |
| 10 | Bought goods in cash | 27,000 |
| 12 | Bought goods on credit from David | 48,000 |
| 15 | Sold goods for cash | 70,000 |

திரு. கௌரி சங்கர் அவர்களின் குறிப்பேட்டில் கீழ்க்காணும் நடவடிக்கைகளைப் பதிவு செய்க

| 2003 | | ரூ. |
|---|---|---|
| அக். 1 | சிவாவிடமிருந்து பெற்ற ரொக்கம் | 75,000 |
| 7 | சயீதுக்கு ரொக்கம் கொடுத்தது | 45,000 |
| 10 | கொள்முதல் செய்தது | 27,000 |
| 12 | டேவிட் என்பவரிடமிருந்து கொள்முதல் செய்தது | 48,000 |
| 15 | விற்பனை செய்தது | 70,000 |

3. Distinguish Journal with Ledger.

குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.

4. Enter the following transactions in the single column cash book of Mrs. Lalitha

| 2002 | | Rs. |
|---|---|---|
| Aug. 1 | Cash in hand | 46,000 |
| 3 | Paid into bank | 12,000 |
| 4 | Cash sales | 24,000 |
| 5 | Credit sales to Mani | 3,000 |
| 7 | Printing charges | 3,000 |
| 9 | Received cheque from Natesan | 8,000 |
| 12 | Dividend received | 2,000 |
| 14 | Computer purchased | 35,000 |
| 17 | Cash received from Mani | 3,000 |
| 24 | Cash withdrawn from bank | 2,000 |

பின்வரும் நடவடிக்கைகளை திருமதி. லலிதாவின் தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க

| 2002 | | ரூ. |
|---|---|---|
| ஆகஸ்டு. 1 | கையிருப்பு ரொக்கம் | 46,000 |
| 3 | வங்கியில் செலுத்தியது | 12,000 |
| 4 | ரொக்க விற்பனை | 24,000 |
| 5 | மணிக்கு கடன் விற்பனை | 3,000 |
| 7 | அச்சுக் கட்டணம் | 3,000 |
| 9 | நடேசனிடமிருந்து காசோலை பெற்றது | 8,000 |
| 12 | பங்காதாயம் பெற்றது | 2,000 |
| 14 | கணிப்பொறி வாங்கியது | 35,000 |
| 17 | மணியிடம் இருந்து ரொக்கம் பெற்றது | 3,000 |
| 24 | வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 2,000 |

5. On 31st March 2004 the cash book of Fashion World showed a balance of Rs.1,500 as cash at bank, but the bank pass book as on that date showed that cheques for Rs.185, Rs.175 and Rs.100 had not been presented for payment also cheques to the amount of Rs.410 paid into the bank had not been cleared. Find out the balance as per pass book as on that date.

2004 மார்ச் 31ல் பேசன் உலகத்தின் ரொக்க ஏடு ரூ.1,500 வங்கி ரொக்க இருப்பை காட்டிற்று, ஆனால் அந்நாளில் வங்கியில் பணம் பெற முன்னிலைப்படுத்தப்படாத காசோலைகள் ரூ.185, ரூ.175 மற்றும் ரூ.100 ஆகும் மற்றும் ரூ.410 மதிப்புள்ள காசோலைகள் வங்கியில் செலுத்தியும் பணமாக்கப்படவில்லை அந்நாளில் செல்லேட்டின் படியான இருப்பை கணக்கிடுக.



[Turn over

6. Bharat company has incurred the following expenditure.

You are required to identify the capital, revenue and deferred revenue expenses

(a) Rs.60,000 travelling expenses of their sales manager who travelled to Japan to attend a meeting in order to increase sales-trip was quite successful

(b) Rs.500 spent for installing machinery

(c) Rs.6,00,000 spent on research and development

(d) Rs.500 paid for fuel.

பாரத் நிறுமம் கீழ்க்கண்ட செலுவுகளைச் செய்தது. முதலின, வருவாயின மற்றும் நீள்பயன் வருவாயினச் செலவுகளைப் பிரிக்கவும்

(அ) விற்பனையைப் பெருக்குவதற்காக விற்பனை மேலாளர் ஜப்பான் சென்றுவர பயணச் செலவு செய்தது ரூ.60,000

(ஆ) இயந்திரம் நிறுவுவதற்கு செலவு செய்தது ரூ.500

(இ) ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான லெசவு செய்தது ரூ.6,00,000

(ஈ) எரிபொருள் வாங்க செலவு செய்தது ரூ.500

7. Prepare a trading account of Mr. Devan for the year ended 31st December 2002

| | Rs. |
|---|---|
| Opening stock | 5,700 |
| Purchase | 1,58,000 |
| Purchase return | 900 |
| Sales | 2,62,000 |
| Sales return | 600 |

Closing stock was valued at Rs.8,600

31 டிசம்பர் 2002-ல் முடியும் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கினைத் தயாரிக்கவும்

| | ரூ. |
|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | 5,700 |
| கொள்முதல் | 1,58,000 |
| கொள்முதல் திருப்பம் | 900 |
| விற்பனை | 2,62,000 |
| விற்பனை திருப்பம் | 600 |

இறுதி சரக்கிருப்பு ரூ.8,600 என கணக்கிடப்பட்டுள்ளது.

III. ● **Answer any FOUR of the following.**

கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் நான்கிற்கு விடை எழுதுக.

**(4 × 10 = 40)**

1. What are the advantage of Double entry system?

இரட்டைப் பதிவு முறையின் நன்மைகள் யாவை?

2. Prepare Trial balance as on 31.12.2002 from the following balances of Ms. Fathima.

| | Rs. | | Rs. |
|---|---|---|---|
| Drawings | 74,800 | Purchase | 2,95,700 |
| Stock (1.1.2002) | 30,000 | Discount received | 1,000 |
| Capital | 2,50,000 | Discount allowed | 950 |
| Furniture | 33,000 | Sales | 3,35,350 |
| Sundry creditors | 75,000 | Rent | 72,500 |
| Printing charges | 1,500 | Sundry expenses | 21,000 |
| Bank loan | 1,20,000 | Bills Receivable | 52,500 |
| Freight | 3,500 | Carriage outwards | 1,500 |
| Income tax | 9,500 | Insurance | 1,200 |
| Machinery | 2,15,400 | Bills payable | 31,700 |

செல்வி பாத்திமா அவர்களின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பபடட் இருப்புகளைக் கொண்டு, 31.12.2002 ஆம் நாளைய இருப்பாய்வு தயாரிக்க

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| எடுப்புகள் | 74,800 | கொள்முதல் | 2,95,700 |
| சரக்கிருப்பு (1.1.2002) | 30,000 | பெற்ற தள்ளுபடி | 1,000 |
| முதல் | 2,50,000 | அளித்த தள்ளுபடி | 950 |
| அறைகலன் | 33,000 | விற்பனை | 3,35,350 |
| பற்பல கடனீந்தோர் | 75,000 | வாடகை | 72,500 |
| அச்சு செலவு | 1,500 | சில்லறைச் செலவுகள் | 21,000 |
| வங்கி கடன் | 1,20,000 | பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 52,500 |
| சத்தம் | 3,500 | வெளி ஏற்றிச்செல் செலவு | 1,500 |
| வருமான வரி | 9,500 | காப்பீடு | 1,200 |
| இயந்திரம் | 2,15,400 | செலுத்துதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 31,700 |

3. An accountant could not tally the Trial balance. The difference of Rs.520 was temporarily placed to the credit of suspense account and subsequently found the following errors.

(a) The total of the discount column on the credit side of the cash book Rs.230 was not posted in the ledger

(b) The total of the Discount column on the debit side of the cash book Rs.150 was omitted to be posted in the ledger

(c) The total of the purchases book was shortly by Rs.600

(d) A sale of Rs.675 to Kalpana was entered in the Sales book as Rs.975

(e) A sale of Rs.500 to Vimala has been entered in the purchase book

Rectify the above errors through suspense account. Also give journal entries for rectification.

இருப்பாய்வின் மிகை வரவு இருப்பு ரூ.520 அனாமத்து கணக்கில் பதியப்பட்டுள்ளது. பின்பு கண்டுபிடிக்கப்பட்ட பிழைகளைத் தகுந்த திருத்தப் பதிவுகளைத் தந்து, அனாமத்து கணக்கை முடிக்க

(அ) ரொக்க ஏட்டின் வரவுப்பக்கத்திலுள்ள தள்ளுபடி பத்தியின் மொத்தம் ரூ.230 பேரேட்டில் எடுத்தெழுதப்படவில்லை

(ஆ) ரொக்க ஏட்டின் பற்றுப்பக்கத்திலுள்ள தள்ளுபடி பத்தியில் மொத்தம் ரூ.150 பேரேட்டில் எடுத்தெழுதப்படவில்லை

(இ) கொள்முதல் ஏட்டின் மொத்தம் ரூ.600 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது

(ஈ) கல்பனாவிற்கு விற்றது ரூ.675 விற்பனை ஏட்டில் ரூ.975 என பதிவு செய்யப்பட்டுள்ளது

(உ) விமலாவிற்கு விற்றது ரூ.500 கொள்முதல் ஏட்டில் பதிய செய்யப்பட்டுள்ளது.

4. Given below is the Trial balance of Shri Hari Prakash. Prepare Trading and Profit and loss account for the year ending 31st March 2002

| Particulars | Dr. Rs. | Cr. Rs. |
|---|---|---|
| Stock as on 1.4.2001 | 50,000 | |
| Sales | | 2,90,000 |
| Sales returns | 10,000 | |
| Purchases | 2,45,000 | |
| Purchase returns | | 5,000 |
| Carriage inwards | 4,000 | |
| Carriage outwards | 6,000 | |
| Wages | 12,000 | |
| Salaries | 18,000 | |
| Printing and Stationery | 900 | |
| Discount allowed | 900 | |
| Discount received | | 600 |

| Particulars | Dr. | Cr. |
|---|---|---|
| | Rs. | Rs. |
| Depreciation | 3,000 | |
| Building | 2,08,100 | |
| Trade expenses | 5,600 | |
| Capital | | 2,72,900 |
| Bills Receivable | 20,000 | |
| Bills payable | | 15,000 |
| | 5,83,500 | 5,83,500 |

Note : Closing stock as on 31.3.2002 is Rs.65,000.

திரு. ஹரிபிரகாஷ் அவர்களின் இருப்பாய்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றிலிருந்து 2002 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக் கணக்கினை தயாரிக்க

| விவரம் | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| சரக்கிருப்பு 1.4.2001 | 50,000 | |
| விற்பனை | | 2,90,000 |
| விற்பனை திருப்பம் | 10,000 | |
| கொள்முதல் | 2,45,000 | |
| கொள்முதல் திருப்பம் | | 5,000 |
| உள் ஏற்றுச் செல் செலவு | 4,000 | |
| வெளி ஏற்றுச் செல் செலவு | 6,000 | |
| கூலி | 12,000 | |
| சம்பளம் | 18,000 | |
| அச்சு மற்றும் எழுதுபொருட்கள் | 900 | |
| தள்ளுபடி கொடுத்தது | 900 | |
| தள்ளுபடி பெற்றது | | 600 |
| தேய்மானம் | 3,000 | |
| கட்டிடம் | 2,08,100 | |
| வியாபாரச் செலவுகள் | 5,600 | |
| முதல் | | 2,72,900 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 | |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | | 15,000 |
| | 5,83,500 | 5,83,500 |

குறிப்பு : 31.3.2002 சரக்கு முடிவிருப்பு ரூ.65,000.

5. On 31[st] December 2002 the cash book of Mr. Saravanan showed debit balance of Rs.8,000. A comparison of cash book with pass book he found the following differences.

(a) A cheque amount of Rs.2,500 were paid is on 27[th] December out of which cheques of the value of Rs.800 were credited in the pass book on 4.1.02

(b) A cheque totalling Rs.4,000 were issued during the month of December out of which cheques of the value Rs.900 were debited in the pass book after 31[st] December.

(c) These was a debit of Rs.20 for bank charges in the pass book

(d) These was s credit of Rs.50 in the pass book for the interest of the current account

(e) An entry of Rs.100 of a payment by a customer direct into bank appears in the pass book

(f) In the cash book debit side Rs.1,000 excessively written in the bank column

(g) Interest on investment amounting Rs.200 collected by the bank appeared in the pass book

(h) Insurance premium of Rs.300 paid by the bank on behalf of Mr. Saravanan appeared in the pass book

Prepare a Bank Reconciliation statement as on 31.12.2002.

திரு. சரவணின் ரொக்க ஏடு 31.12.2002 அன்று ரூ.8,000. பற்று இருப்பைக் காண்கின்றது. அவரது ரொக்க ஏட்டை செல்லேட்டுன் ஒப்பிட்டு பார்க்கும் பொழுது பின்வரும் மாறுபாடுகளை அவர் கண்டுணர்கிறார்.

(அ) ரூ.2,500 மதிப்புள்ள காசோலைகளை இவர் 27.12.2002 அன்று வங்கியில் செலுத்துகின்றார். அவற்றுள் ரூ.800 மதிப்புள்ள ஒரு காசோலை செல்லேட்டில் 4.1.2002 அன்றுதான் வரவு எடுக்கப்பட்டுள்ளது

(ஆ) ரூ.4,000 மதிப்புள்ள காசோலைகளை டிசம்பர் மாதத்தில் வெளியிடப்பட்டன. அவற்றுள் ரூ.900 மதிப்புள்ள ஒரு காசோலை செல்லேட்டில் 31.12.2002க்குப் பிறகு பற்று வைக்கப்பட்டது.

(இ) வங்கி கட்டணத்திற்கு என செல்லேட்டில் ரூ.20 பற்று வைக்கப்பட்டுள்ளது

(ஈ) நடப்புக் கணக்கு மீதான வட்டிக்கென செல்லேட்டில் ரூ.50 வரவு வைக்கப்பட்டுள்ளது

(உ) வாடிக்கையாளர் ஒருவரால் நேரடியாக செலுத்தப்பட்ட ரூ.100 -க்கான பதிவு செல்லேட்டில் உள்ளது

(ஊ) ரொக்க ஏட்டின் செலுத்தல் பகுதியில் உள்ள வங்கிப் பத்தியில் ரூ.1,000 அதிகமாக எழுதப்பட்டுள்ளது

(எ) வங்கியில் வசூலிக்கப்பட்ட முதலீடு மீதான வட்டி ரூ.200 செல்லேட்டில் காணப்படுகிறது

(ஏ) சரவணுக்காக வங்கியரால் செலுத்தப்பட்ட காப்பீட்டுத் தொகை ரூ.300 செல்லேட்டில் மட்டும் உள்ளது.

31.12.2002 அன்றுள்ளபடியான வங்கி சரிக்கட்டும் பட்டியலை தயாரிக்கவும்.